அதே மாதிரி டிபுடி ஸ்பீக்கரைப் பிடிக்கவில்லை என்றால் ஆளும் கட்சியின் சார்பிலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து வெளியேற்றுகிறார்கள்.

இப்போது நாங்கள், எதிர்க் கட்சியினர் கொண்டுவந்திருக்கிறோம். எதிர்க் கட்சியினர் பலர் கருத்துக்களைச் சொல்கிறார்கள் என்றால், அது எதிர்க் கட்சியினருக்காக மட்டுமல்ல ; ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள் எதிர்த்துச் சொல்ல முடியாத நிலையில் இருப்பார்கள். அவர்களுக்காகவும் தான் நாங்கள் சொல்கிறோம். ஆகவே உறுப்பினர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை சபாநாயகர் கேட்டு, நியாயமான தீர்ப்பை வழங்க வேண்டும்.

இந்த சபாநாயகர் அப்படி நடந்துகொள்ளவில்லை என்பதால்தான் எங்களுடைய தீர்மானத்திலே நான்கு குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறோம். அனந்தநாயகி அம்மையார் அவர்கள் அதற்குப் பல்வேறு விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நான் கூறிய இந்தக் காரணங்களால் இந்த சபாநாயகரை நீக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, இது மிகவும் முக்கியமானது என்று சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

(6) அறிவிப்பு

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : இன்று விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகளான 25. சின்கோனா, 44. காட்டு வளத் துறை, 54. காட்டுவள மூலதனச் செலவு ஆகியவை நாளையதினம் எடுத்துக்கொள்ளப்படும்.

நாளை எடுத்துக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கைகளான 8. தேர்தல்கள், 9. மாநில ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், 40. இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, 41. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும், 42. பல்வகை, 45. இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும், 46. ஜமீன்தார்களுக்கு இழப்பீடு, மற்றும் 56. மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும், ஆகியவை 2-4-1974 அன்று முற்பகல் எடுத்துக்கொள்ளப்படும்.

2—4—1974 அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கை 23. கூட்டுறவு அன்று பிற்பகல் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைப் பேரவைக்கு அறிவித்துக்கொள்கிறேன்.

(2) பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்—தொடர்ச்சி.

திரு. மணலி சி. கந்தசாமி : தலைவரவர்களே, இன்றையதினம் சபாநாயகராக இருக்கும் புலவர் கோவிந்தன் அவர்கள் மீது கொண்டுவரப்